## 2003.12.11 ஆந் திகதிய இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மற்றும் தரமுயர்வுக்கான நடைமுறை ஏற்பாடுகளின் படி இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்களுக்கான முதலாம் திணைக்கள பரீட்சை

இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்களுக்கான 2003 ஆம் ஆண்டு ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப II ஆம் வகுப்பின் "ஆ" வகுதியில் இருந்து II ஆம் வகுப்பின் "அ" வகுதிக்கு தரமுயர்த்துவதற்காக நடாத்தப்படும் முதலாம் திணைக்கள பரீட்சை 2023 மார்ச் மாதம் 18,19 ஆம் திகதிகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகளுக்கு ஏற்புடைய பரீட்சை நிலையங்கள் குறிப்பிடப்படும்.

### 02. பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமைகள்

2003.12.11 ஆந் திகதிய இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மற்றும் தரமுயர்வுக்கான நடைமுறை ஏற்பாடுகளின் படி, இந்த அமைச்சின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட, தற்போது பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் சேவையாற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் சகல தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2003.12.11 ஆந் திகதிய இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மற்றும் தரமுயர்த்தல் நடைமுறை ஏற்பாடுகளின் படி மேற்படிப் பரீட்சைக்கு ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களாலும் விண்ணப்பிக்க முடியும்.

*** குறிப்பு : - இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் தற்போது தொழிநுட்பவியல் பதவியில் தரம் I இற்கு மற்றும் தரம் II இற்கு தரமுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினதும் தரம் III இன் உத்தியோகத்தர்களினதும் தரமுயர்வுத் திகதி தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் முடிவே இறுதித் தீர்மானமாகும்.

### 03. மொழி ஊடகம்

மொழி ஊடகமாக, உத்தியோகத்தர் அரச சேவையில் இணைவதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி ஊடகமாக இருத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் தனக்கு உரித்தற்ற மொழியில் பரீட்சைக்குத் தோற்றியிருப்பதாக பின்னர் கண்டறியப்பட்டால், அவரது பரீட்சார்த்த நிலை இரத்து செய்யப்படும்.

### 04. விண்ணப்பங்களை அனுப்புதல்

இப்பரீட்சைக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் http://apps.moha.gov.lk:8090/to_exam என்ற இணைப்பின் (link) ஊடாக இணையவழி முறைக்கு (online) மேற்கொள்ளப்படும். பரீட்சை விண்ணப்பதாரிகள் 2023.03.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறுகின்ற, தெளிவற்ற மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**05. பரீட்சைக்கு அனுமதித்தல்:**

அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இணையவழி முறை ஊடாக பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். அந்த அனுமதிப் பத்திரங்களை உரிய வகையில் நிரப்பி பிரத்தியேகக் கோவை ஊடாக நிறுவன தலைவரிடமிருந்து உறுதிப்படுத்தி பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறில்லாத அனுமதிப் பத்திரங்களைக் கொண்டவர்களுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**06. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உள்ள ஊழியர் குழாத்திடம் உறுதிப்படுத்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

- தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

**07. பரீட்சையின் கட்டமைப்பு**

| பாட இலக்கம் | பாடங்கள் | நேரம் | அதிகபட்ச புள்ளி அளவு | சித்திக்குரிய புள்ளி அளவு |
|---|---|---|---|---|
| **01** | **திணைக்கள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்** | **02 மணித்தியாலம்** | **100** | **40** |
| **02** | **தொழில்நுட்பம் I ஆம் பகுதி** (கணிதம், அளவிடுதல், திட்ட வரைவிடல் மற்றும் நகலெடுத்தல் மற்றும் விருப்பத்துக்குரிய பாடங்கள்) | **02 மணித்தியாலம்** | **100** | **40** |
| **03** | **தொழில்நுட்பம் II ஆம் பகுதி** (அளவிடுதல் மற்றும் தொடர்ச்சி மட்டம் பார்த்தல் எழுத்துப் பரீட்சை) | **02 மணித்தியாலம்** | **100** | **40** |

**08. பாடத் திட்டம்**

**8.1. தொழில்நுட்பப் பாடங்கள்**

**8.1.1 கட்டாயப் பாடங்கள்**

- கணிதம் ( கீழ்ப் பகுதி)
- அளவிடுதல் ( கீழ்ப் பகுதி)
- அளவிடுதல் மற்றும் தொடர்ச்சி மட்டம் பார்த்தல்*
- திட்ட வரைவிடல் மற்றும் நகலெடுத்தல்.

**8.1 விருப்பத்துக்குரிய பாடங்கள் ( கீழ்வரும் பாடங்களில் 02 இனை)**

- அடிப்படை கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு

- நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு
- வேலைத் தள நிர்வாகம்
- பாதைகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு

*அளவிடுதல் மற்றும் தொடர்ச்சி மட்டம் பார்த்தல்:-

இந்தப் பாடங்கள். எழுத்துப் பரீட்சை, அளவீடுகள் பிரயோகம், தொடர்ச்சி மட்டம் பார்த்தல் பிரயோகம் என்றவாறு மூன்று பகுதிகளாகக் காணப்படும். மேற்குறிப்பிட்ட பாடங்களின் சித்தியைத் தீர்மானிக்கும் போது மேற்குறிப்பிட்டவாறான பகுதிகள் மூன்றின் ஒவ்வொரு பகுதியிலும் 35% ஆன குறைந்த பட்ச புள்ளி அளவைப் பெறுதல் வேண்டும். அத்தோடு முழுப் பாடத்திலும் சித்தியடைவதற்காக மூன்று பகுதிகளிலும் 40% ஆன புள்ளி அளவினைப் பெறுதல் வேண்டும்.

### 8.2. திணைக்கள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்

இந்த வினாத்தாள் திணைக்கள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், சட்ட நடைமுறைகள் தொடர்பான கேள்விகளைக் கொண்ட வினாத்தாள் ஆகும்.

<u>குறிப்பு</u>

2003.12.18 ஆந் திகதிய இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மற்றும் தரமுயர்த்தல் நடைமுறையின் 10:1 (அ) பிரிவின் படி மற்றும் 2006.01.06 ஆந் திகதிய இலங்கை தொழில்நுட்ப சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 8.2 (இ) பிரிவின் படி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தகைமைகளில் ஒன்றினைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களை முதலாம் திணைக்களப் பரீட்சையின் தொழில்நுட்பப் பாடங்களில் இருந்து விடுவிக்க உரித்துடையவராவார். **ஆனால் அவர் திணைக்கள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் என்ற பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.**

மற்றைய உத்தியோகத்தர்கள் மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் திணைக்களப் பரீட்சையின் சகல பாடங்களுக்கும் தோற்ற வேண்டும்.

### 09. பிரயோகப் பரீட்சை

இந்த திணைக்களப் பரீட்சையின் ஒரு பகுதியான பிரயோகப் பரீட்சை, இந்த அமைச்சினால் எதிர்வரும் காலத்தில் பெயர் குறிப்பிடப்படும் நிறுவனமொன்றில் நடாத்தப்படவுள்ளது. அளவிடுதல் பிரயோகம், தொடர்ச்சி மட்டம் பார்த்தல் பிரயோகம் என்ற ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் என்பதோடு, பரீட்சையில் சித்தியெய்வதற்காக ஒரு பகுதியில் குறைந்தபட்சம் 35% இனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பிரயோகப் பரீட்சையை நடாத்துவதற்குரிய இடம், திகதி மற்றும் நேரம் உள்ளடக்கிய அதற்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் பின்னர் வெளியிடப்படும். இது தொடர்பில் எதிர்வரும் காலத்தில் உமது கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும்.

**10. பரீட்சை நிலையம்**

இப்பரீட்சையானது 2023 மார்ச் மாதம் 18,19 ஆகிய இரு தினங்களில் சகல மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் மாவட்ட செயலக வளாகத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அளவுகள் குறைவாக இருக்கும்பட்சத்தில் அவ்வாறான மாவட்டங்கள் பலவற்றிற்கு பொதுவான பரீட்சை நிலையமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நீல் பண்டார ஹபுகின்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

2023 பெப்ரவரி மாதம் ........... ஆந் திகதி

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில்.